
DIOCESE OF KUMBAKONAM

NEWS - LETTER

(Compiled and Edited by Diocesan News-Letter Committee)

VOL. : 52 MARCH - 2025 No. 03





இத்தவகாலத்தில்
எண்ணங்களை உருவேற்றுவோம்
மனங்களை உயிரூட்டுவோம்
செயல்களை உயர்வாக்குவோம்!

ஆயரின் செய்தி
பெண்களைப் போற்றுவோம்

அன்புள்ள சகோதர, சகோதரிகளே!

சர்வதேச மகளிர் தினம் என்பது பெண்கள் உரிமைகளை மீட்டெடுக்கும் இயக்கத்தின் மைய நோக்கமாக ஆண்டுதோறும் மார்ச் 08 அன்று கொண்டாடப்படுகிறது. பாலின சமத்துவம், குழந்தை பெற்றுக்கொள்ளும் உரிமைகள் மற்றும் பெண்களுக்கு எதிரான வன்முறை துஷ்பிரயோகம் போன்ற பிரச்சனைகளுக்கும் கவனம் செலுத்தி தீர்வு காண்பது மகளிர் தினத்தின் நோக்கமாகும்.

12.10.1930 குடியரசு பத்திரிக்கையில் தந்தை பெரியார் எழுதியிருப்பது இன்றும் முழுமை அடையாத ஏக்கமாகவே உள்ளது. "எந்தெந்த காரணத்தால் கணவனுக்கு பெண் பிடிக்கவில்லையோ, ஒத்துவரவில்லையோ, அந்த காரணங்களால் பெண்ணுக்கும் கணவனை பிடிக்காதபோது, கணவனுக்கு இருக்க வேண்டுமென்று சொல்லப்படும் சுதந்தரமும், வசதியும் போல பெண்களுக்கும் ஏற்படுமானால், பிறகு இந்த மாதிரியான அனுதாபமும், கவலையும் கொள்ளவேண்டிய அவசியம் ஏற்பட இடமே இருக்காது என்பதுதான். நம்மைப் பொருத்தவரை ஆண்களுக்குச் சொன்ன காரியங்கள் எல்லாம் பெண்களுக்கும் பொருந்துமென்றும், அவர்களுக்கும் ஆண்களைப் போலவே ஏற்படவேண்டும் என்றும், அம்மாதிரியே அவர்களும் நடந்துக்கொள்ள வேண்டுமென்றும், உலக வாழ்விலும், சமுதாயத்திலும், சட்டத்திலும், மதத்திலும் ஆண்களுக்குள்ள வசதிகளும், உரிமைகளும், பெண்களுக்கு இருக்க வேண்டுமென்றும் அப்போதுதான் பெண்களுக்கு திருப்திகரமான இன்பத்தையும், ஆசையையும் அடைய முடியுமென்று கருதுகிறேன்".

என்று 94 வருடங்களுக்கு முன்பு தந்தை பெரியார் கண்ட கனவு இன்றும் முழுமையடையாத கனவாகவே உள்ளதை நாம் ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும்.

எந்த ஒரு வன்முறையிலும் சண்டையிலும், கலவரத்திலும், போரிலும் மாநில அளவிலும் நாட்டு அளவிலும், உலகளவிலும் முதலில் பாதிக்கப்படுவது பெண்கள்தான். பொதுவாகவே எப்போதும் பெண்களே வன்முறைக்கு இரையாக்கப்படுகின்றார்கள். உலகளவில் இரண்டு வியாபாரம் இலட்சம், கோடி பணத்தை சம்பாதிக்கக்கூடியதாக இருப்பதாக கூறுகின்றார்கள்.

ஒன்று – போர்கருவி விற்பனை,

இரண்டு – பெண்கள் விற்பனை.

தினம் தினம் நூற்றுக்கணக்கில் பெண்கள், பெண் குழந்தைகள் காணாமல் போய்கொண்டேதான் இருக்கின்றார்கள் என்பது பெண்கள்மீது நடத்தப்படும் அத்துமீறல்களின் உச்சமாகும். உடல்ரீதியிலான பெண்களின் மனவலிகளைஆண்கள் எப்போது உணர்ந்து வாழ்கின்றார்களோ அப்போதுதான் பெண்கள் மானத்தோடும மரியாதையோடும் நல்மனநிலையோடும் மகிழ்வோடும் பயமின்றி வாழ்வதற்கு ஏற்ற இடமாக இந்த மண் மாறுகின்றது; இல்லையேல் பெண்களுக்கு வெந்து தனியும் சுடுகாடாகும்.

எந்த ஒரு ஆணும் முழுமையடைய வேண்டுமெனில் அவன் நான்கு பெண்களின் அரவணைப்பில் வளர்ந்தெடுக்கப்படவேண்டும்.

பெற்ற தாய்

உடன் பிறந்த அக்கா, தங்கை

மனைவி

பெற்ற மகள்.

இந்த நான்கு வகை பெண்களின் வாழ்வில் எந்த ஒரு ஆண் அந்தந்த நிலையில் முதிர்ச்சி பெற்று மதித்து மகிழ்ந்து உணர்ந்து வாழ்கின்றானோ அவனே ஏனைய பெண்களையும் மதிக்கக்கூடிய நம்பிக்கையாளனாக வாழக்கூடியவனாவான். தன் தாய்கோ, அக்கா தங்கைக்கோ, மனைவிக்கோ, மகளுக்கோ நிகழவே கூடாதவை என்று எந்த ஒரு ஆண் நினைக்கின்றானோ அதையே மற்ற பெண்களுக்கும் செய்யாது நடக்காது பார்த்துக்கொள்பவனே இந்த மண்ணில் வாழ தகுதியானவன்.

"பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும்
பாரினில் பெண்கள் நடத்த வந்தோம்
எட்டுமறிவினில் ஆணுக்கிங்கே பெண்
இளைப்பில்லை காணென்று கும்மியடி". என்ற

பாரதியின் கும்மி கனவு இன்று கல்வித்துறையில் பெண்கள் கொஞ்சம் முன்னேற்றம் கண்டிருந்தாலும் வேலை பார்க்கும் இடங்களில் சந்திக்கும் இடையூறுகள் கொஞ்சம் நஞ்சம் அல்லவே. "பெண்ணாய் பிறப்பதற்கே மாதவம் செய்திருக்க வேண்டும்" – என்ற தேசிக விநாயகம் பிள்ளையின் மகா உன்னத உணர்வு இன்றும் பெண்களால் உணரப்பட முடியவில்லை என்பதுதானே நிதர்சன உண்மையாகும். "பெண்களுக்குச் சுதந்திரத்தை வழங்காதவரை ஒரு நாடு சுபீட்சம் அமையாது", என்றார் ஜவகர்லால் நேரு. அது வல்லரசே ஆனாலும், பொதுவுடைமை அரசானாலும், மதம் மைய அரசானாலும் பெண்கள் சுதந்திரமாக மகிழ்ச்சியோடு பயமின்றி வாழ முடியவில்லை என்றால் அந்த நாடு இருண்டுபோன ஒரு அடிமை நாடே ஆகும். எனவே பெண்ணின் பெருமையையும் உரிமையையும் உணர்வுகளையும் புரிந்துக்கொண்டு முழு விடுதலை பெற்ற நாடாக,

முழுமையான முதிர்ச்சி அடைந்த மனிதர்களாக வாழ்கின்றபோது இந்த பூமி பரிபூரணமான, நிம்மதியான, நிறைவான, மகிழ்ச்சியான வாழ தகுதியான மண்ணாக பெண்களுக்கு மாறும் என்பதில் மாற்று கருத்தில்லை.

பெண்கள் ஒன்றும் அழகு பொம்மைகள் அல்ல, அலங்காரப் பொருட்கள் அல்ல அறிவு மதி கூர்மை கொண்டவர்கள் என்பதை மறக்கவேண்டாம். உடல் ரீதியாக மனம் ரீதியாக உளவியல் ரீதியாக, உணர்வு ரீதியாக, சிந்தனை ரீதியாக, ஆண்களிலிருந்து பெண்கள் வேறுபட்டவர்கள்தான். ஆனால் சுயமரியாதைக்கும் வாழ்வியல் உரிமைக்கும் ஆண்களுக்கும் சமமானவர்கள் பெண்கள் என்பதை விட்டுவிடக்கூடாது. இதற்கெல்லாம் உலக மகளிர் அனைவருக்கும் முன்னோடியாக முதன்மை பெண்மனியாக இருப்பவர் நம் அன்னை மரியாள்.

துணிவுக்கும், வீரத்துக்கும், எழுட்சிக்கும், உறவுக்கும், சுய உணர்வுக்கும், தன்மானத்திற்கும், சுயமரியாதைக்கும், இறை அச்சத்திற்கும் எழுட்சியும் இலக்கணமுமான நம் அன்னை மரியாளை பின்பற்றுவோம். ஆதலால், "செய்க தவம் செய்க தவம்!

பெண்மையைப் போற்றுவோம்!

வெல்க பெண்ணியம்!

வாழ்க ஆணுக்கு சமமான பெண்கள்!.

மகிழ்வில்

+ ஆயர் ஜீவானந்தம். **A**

Bishop's Programme – MARCH, 2025

Date	Day	Time	Programme
01	Sat	09.00 a.m.	Catechetical Seminar for School HMs: Pastoral Centre, Kumbakoam
		05.00 p.m.	Annual Day: Pallividai
02	Sun	10.00 a.m.	Mass: Kumbakonam
03	Mon	10.00 a.m.	Meeting: Related with Diocesan Marriage and Community Halls, Kumbakonam
04	Tue		Canonical Visit: Carmel Ashram, Kumbakonam
05	Wed	06.30 a.m.	Ash Wednesday Mass: Cathedral, Kumbakonam
08	Sat	10.00 a.m.	Silver Jubille Celebration: Idaya College, Kumbakonam
09	Sun	05.30 p.m.	New Chapel Blessing: Thachankurichi, Parish of Uthamanur Pudur
10	Mon	10.00 a.m.	Board Meeting: St Peter's Arts and Science College, Melaneduvai
12	Wed	10.00 a.m.	Clergy Seminar and Silver & Golden Jubilee Celebration of Priests: Poondi
15	Sat	10.00 a.m.	Board Meeting: Sahayamadha Hospital, Pullambadi
		04.00 p.m.	Women's Day Celebration: Women Commission, Pullambadi
16	Sun	08.00 a.m.	Mass: Irungalur
		06.00 p.m.	New Chapel Blessing: Alangudi, Parish of Ayyampettai
19	Wed	06.30 a.m.	Mass: St Joseph's Hr. Sec. School, Kumbakonam
22	Sat	09.00 a.m.	Vicariate Level Convention Program: Kumbakonam
		10.30 a.m.	Board Meeting: KMSSS, Kumbakonam
24	Mon		Visitors' Day: Fathers and Sisters
25	Tue		Visitors' Day: Lay People
26	Wed	10.00 a.m.	General Body Meeting: PSSS, Perambalur

BIRTHDAY

07.03.1977	Fr. S. Felix Samuel	Varadarajanpet
10.03.1985	Fr. I. Antonidoss	Rome
10.03.1989	Fr. J. Arockia Rajesh	Agnespuram
11.03.1970	Fr. M. Joseph Dhanaraj	Naduvalur
15.03.1982	Fr. A. Thomas Simonraj	Kandiyankuppam
21.03.1964	Fr. I. Albert	Emmaus, Sithanangur
22.03.1948	Fr. A. Antony Joseph	Kumbakonam
22.03.1962	Fr. D. Antony Solomon	Sembodai
23.03.1957	Fr. S. Soosainathan	Periyaverseeli
26.03.1977	Fr. S. Don Bosco	Kumbakonam
26.03.1991	Fr. S. Belfit Antony	Kumbakonam
30.03.1968	Fr. M. Dominic Savio	Ariyalur

NECROLOGY

02.03.1973	Rev. Fr. D. Lourdu Pitchai	Kumbakonam
03.03.1980	Rev. Fr. A. Sebastian	Kokkudi
07.03.2022	Rev. Fr. L. Vincent Roch Manickam	Kokkudi
11.03.2006	Rev. Fr. S. Soosai	Kumbakonam
12.03.2002	Rev. Fr. V.J. Kuriakose	Perungulam
13.03.2001	Rev. Fr. P. Arokiasamy Lourdes	Annamangalam
19.03.1934	Rev. Fr. Packianathar	Kumbakonam
19.03.1937	Rev. Fr. N. Savarinathar	Michaelpatti
19.03.1978	Rev. Fr. Chinnasamy	Kumbakonam
19.03.2016	Rev. Fr. A. Mairadoss	Kumbakonam
23.03.2012	Rev. Fr. P. Antonisamy	Kumbakonam
24.03.1948	Rev. Fr. I. Susainathar	Kumbakonam
31.03.2019	Rev. Fr. I. Arulswamy	Kumbakonam

CLERGY SEMINAR

Dear Rev. Fathers,

It is our pleasure to invite you for the Clergy Seminar on March 12, 2025, Wednesday at the Poondi Madha Retreat Centre. The program goes as follows:

Date: 12-03-2025

10.00 am	:	Arrival
10.30 am	:	Effective Pastoral Leadership in the Context of Synodal Nature of the Church - Rev. Fr. Joe Andrew, Sdb
11.30 am	:	Break
11.45 a.m.	:	Group Discussion
01.00 pm	:	Lunch
02.00 pm	:	Reporting Session
03.00 pm	:	Felicitation to Golden & Silver Jubilarians & Mass: Rev. Fr. R. Vincent Ferror, Rev. Fr. A. Benjamin Joseph Raj & Rev. Fr. M. Selvaraj
04.15 pm	:	Tea & Dispersal
Invitees	:	All the priests (Diocesan & Religious) working in the Diocese

Cordially Inviting,

Msgr. M. Philomindas
Vicar General

Rev. Fr. A. Martin De Pores
Secretary, Dio.Clergy Commission

Important Dates to mark in our Clergy Annual Plan

March 12, 2025 : Clergy Seminary, Poondi Retreat Centre Wednesday

April 14, 2025 : Clergy Recollection & Chrism Mass, Cathedral Monday

May 10, 2025 Saturday	:	Diocesan Pastoral Council Meeting, Pastoral Centre, Kum. (Senate members, Council members, Commission Secretaries, Representatives from the Religious and two lay persons (one man & one lady) from every parish – one representing the main station and the other the sub-stations.
June 18 & 19, 2025 Wednesday & Thursday	:	All Priests' Meet, Poondi Madha Retreat Centre, (Diocesan Finance & Policy Drafting – discussion)
November 09-14, 2025	:	Annual Clergy Retreat – I Batch
November 16-21, 2025	:	Annual Clergy Retreat – II Batch

திருத்தந்தையோடு மன்றாடுவோம்

மார்ச் :

நெருக்கடியிலுள்ள குடும்பங்களுக்காக...



உடைந்த குடும்பங்கள் மன்னிப்பதன் மூலம் தங்கள் காயங்கள் ஆறும் என்பதைக் கண்டுணரவும், வேறுபாடுகளிலும் ஒவ்வொருவரின் கொடைகளை மீண்டும் கண்டுபிடிக்கவும் நாம் மன்றாடுவோம்.

நம் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின்

2025-ஆம் ஆண்டிற்கான தவக்காலச் செய்தி

"எதிர்நோக்கின் அடிப்படையில் நாம் அனைவரும் இணைந்து பயணிப்போம்!"

மொழிபெயர்ப்பு: **அருள்முனைவர். பிரான்சிஸ் ஜோசப்**

தமிழக ஆயர்பேரவை துணைப் பொதுச் செயலர்.

அன்பார்ந்த சகோதர சகோதரிகளே!

நாம் அனைவரும் திருநீற்றை நெற்றியில் பூசிக்கொள்ளும் பரிகாரச் சடங்கின் வழியாக, தவக்கால ஆண்டுத் திருப்பயணத்தை நம்பிக்கையிலும் எதிர்நோக்கிலும் தொடங்க உள்ளோம். நமது அன்னையும் ஆசிரியையுமான திரு அவை, கடவுளின் அருளுக்கு நமது இதயங்களைத் திறந்திட அழைத்து, ஆண்டவர் இயேசு கிறிஸ்து பாவத்தின் மீதும் சாவின் மீதும் கொண்ட பாஸ்கா வெற்றியை மிகுந்த மகிழ்வோடு நாம் அனைவரும் கொண்டாட விரும்புகிறது. இதுவே, "சாவு முற்றிலும் ஒழிந்தது; வெற்றி கிடைத்தது. சாவே, உன் வெற்றி எங்கே? சாவே, உன் கொடுக்கு எங்கே?" (1 கொரி 15: 54-55) என்று பவுலடியாரை அறைகூவலிடத் தூண்டியது. உண்மையிலேயே சிலுவையில் அறையப்பட்டவரும் பின்பு உயிர்த்தெழுந்தவருமான இயேசு கிறிஸ்துவே நமது நம்பிக்கையின் இதயமாகவும் எதிர்நோக்கின் உறுதிமொழியாகவும் உள்ளார். இது, தம் அன்பார்ந்த மகனில் முன்பே நிறைவேறிய நிலைவாழ்வு எனும், கடவுளின் பெரிய வாக்குறுதியாக அமைகிறது (காண். யோவா 10:28; 17:3).

யூபிலி ஆண்டின் அருளில் நாம் பங்கெடுக்கும் இத்தவக்காலத்தில், 'எதிர்நோக்கின் அடிப்படையில் நாம் அனைவரும் இணைந்து பயணிப்போம்' என்றால் என்ன? என்பதைக் குறித்தும் கடவுள் தன் இரக்கத்தால் நம் எல்லாருக்கும் தனிப்பட்ட விதத்திலும் குழுவாகவும் விடுக்கும் மனமாற்றத்திற்கான அழைப்பினைக் குறித்தும் ஒரு சில சிந்தனைகளை விவரிக்க ஆசைப்படுகிறேன்.

முதன் முதலாக, பயணம் மேற்கொள்வது: இந்த யூபிலி ஆண்டின் விருதுவாக்கான 'எதிர்நோக்கின் திருப்பயணிகள்' விடுதலைப் பயண நூலில் விவரிக்கப்பட்டுள்ள வாக்களிக்கப்பட்ட நாட்டை நோக்கிய இஸ்ராயேல் மக்களின் நெடிய பயணத்தை நம்மில் தூண்டி எழுப்புகிறது. அடிமைத் தளையிலிருந்து விடுதலையை நோக்கிய கடினமான இந்தப் பாதை, இறைவனால் விரும்பப்பட்டதும் வழிநடத்தப்பட்டதுமாய் உள்ளது. அவர் தம் மக்களை அன்பு செய்பவராகவும் எப்பொழுதும் அவர்களுக்கு நம்பிக்கைக்குரியவராகவும் இருக்கின்றார். நாம் வாழும் இந்நாள்களில் நம்முடைய சகோதர சகோதரிகள், தங்களுக்கும் தங்களுக்கு நெருக்கமானவர்களுக்கும் சிறந்ததொரு வாழ்வை அமைத்துக்கொள்ள அவலம் மற்றும் வன்முறை போன்ற சூழ்நிலைகளிலிருந்து தப்பித்துச் செல்ல நினைக்கும் அவர்களை நினைக்காமல், விவிலியத்தினுடைய விடுதலைப் பயணத்தைச் சிந்தித்துப் பார்ப்பது என்பது மிகவும் கடினமான ஒன்று. ஆகவே, மனமாற்றத்திற்கான முதல் அழைப்பு என்பது நாம் அனைவரும் இந்த வாழ்க்கையில் திருப்பயணிகள் என்பதைப் புரிந்துகொள்வதிலிருந்து வருகிறது. நம் அனைவரின் வாழ்வு, இந்தக் கருத்தை எப்படி பிரதிபலிக்கிறது என்பதைப் பற்றி சற்று, நம்மையே நாம் கேட்டுக்கொள்ள ஒவ்வொருவரும் அழைக்கப்படுகின்றோம். நான் உண்மையிலே பயணத்தை மேற்கொள்கிறேனா? இல்லை, பயத்தினாலும் எதிர்நோக்கின்மையாலும் செயலற்றவனாகவோ அல்லது என்னுடைய சுகமான வட்டத்தை விட்டு வெளியே வரமுடியாமல் தயக்கம் கொண்டவனாகவோ அதனால் நகர முடியாமல் அப்படியே தேங்கியே நிற்கிறேனா? நம்முடைய அன்றாட வாழ்க்கையை புலம்பெயர்ந்தவரோடு அல்லது வெளிநாட்டவரோடு ஒப்பிட்டுப் பார்த்து அதன் வழியாக அவர்களுடைய அனுபவங்களில் எப்படி நாம் நம்மையே ஒன்றிணைத்துக் கொள்வது என்ற

படிப்பினையைப் பெறவும், இதன் வழியாக கடவுள் நம்மிடம் தந்தையின் இல்லத்தை நோக்கிச் சிறந்த முறையில் நம் திருப்பயணத்தில் முன்னேற எதை எதிர்பார்க்கிறார் என்று கண்டுணர்ந்து கொள்வதும் நமக்கான சரியானதொரு தவக்காலப் பயிற்சியாக அமையும். வழிப்போக்கர்களாகிய நம் எல்லாருக்கும் இது சிறந்ததோர் ஆன்மிகச் சோதனையாகவும் அமையும்.

இரண்டாவதாக, இணைந்து பயணித்தல்: கூட்டொருங்கியக்கத் திரு அவையாக இருக்க, இணைந்து பயணிக்க நாம் அழைக்கப்படுகிறோம். கிறித்தவர்கள் தனிமையாகப் பயணிக்கும் பயணிகளாக அல்லாமல் மற்றவர்களுடன் ஒன்றிணைந்து நடக்க அழைக்கப்படுகின்றோம். தூய ஆவியார் நம்மை பின்னால் கொண்டுவந்து நாம் சுயநலவாதிகளாக இல்லாமல் கடவுளையும் நமது சகோதர சகோதரிகளையும் நோக்கி நடந்திட உந்தித் தள்ளுகிறார். இணைந்து பயணித்தல் என்பது கடவுளின் பிள்ளைகள் என்ற பொதுவான மேன்மையின் அடித்தளத்தில் நம் ஒன்றிப்பை ஒருங்கிணைந்து பார்ப்பதாகும் (காண். கலா 23: 26-28). அதாவது, ஒருவர் மற்றவருடன் இணைந்து நடப்பதும், எவரையும் தள்ளாமலும் மிதித்து விடாமலும், கோபம் மற்றும் வெளிவேடத்தால் எவரையும் பின்னால் விடாமலும் ஒதுக்கி விடாமலும் இருப்பதாகும். நாம் அனைவரும் அன்பிலும் பொறுமையிலும் அடுத்தவர் நலனில் அக்கறை கொண்டு ஒற்றை இலக்கை நோக்கி உறுதியோடு ஒரே திசையில் பயணிப்போம்!

இத்தவக்காலத்தில் நம்முடைய வாழ்க்கையில், நம் குடும்பங்களில், பணித்தளங்களில் மற்றும் பொது இடங்களில் நாம் மற்றவருடன் ஒன்றாக இணைந்து நடப்பதற்கும் அவர்களுக்குச் செவிமடுப்பதற்குப் பதிலாக நம்முடைய தேவைகளைப் பற்றி மட்டுமே நினைத்துக் கொண்டிருக்கும் சோதனையிலிருந்து நம்மை தற்காத்துக் கொள்ளத் தகுதி உள்ளவர்களா? என்பதைக் குறித்துக் கடவுள், நம்மைச் சுய பரிசோதனை செய்ய அழைக்கிறார். இறையாட்சிப் பணியில் பங்கு பெறும் ஆயர்களாக, குருக்களாக, துறவிகளாக, பொதுநிலையினர்களாக மற்றவர்களோடு இணைந்து செயலாற்றுகிறோமா? என்று நம்மை நாமே கேட்டுக்கொள்வோம். நம் அருகில் இருப்பவரோடும் தூரத்தில் இருப்பவரோடும் ஆக்கபூர்வமான உடல் மொழிகளில் வரவேற்கும் மனநிலையை வெளிப்படுத்துகிறோமா? குழுமங்களில் தானும் ஒருவர் என மற்றவர்கள் பங்கெடுக்கச் செய்கிறோமா? அல்லது அவர்களைத் தனித்து வைக்க முயற்சித்திருக்கிறோமா? இதுவே மனமாற்றத்தின் இரண்டாம் அழைப்பாகும். அது கூட்டொருங்கியக்கத்திற்கான அழைப்பாகும்.

மூன்றாவதாக, எதிர்நோக்கின் அடிப்படையில் நாம் அனைவரும் இணைந்து பயணிப்போம்; ஏனெனில், வாக்குறுதியை நாம் பெற்றுக் கொண்டுள்ளோம். யூபிலியின் மையக்கருத்தான 'எதிர்நோக்கு ஏமாற்றம் தராது' (உரோ. 5:5) என்பது, பாஸ்காவின் வெற்றியை நோக்கி நமது தவக்காலத் திருப்பயணத்தின் இலக்காக அமையவேண்டும். 'நம்பிக்கை விடுதலை அளிக்கும்' என்ற தனது திருமடலில், திருத்தந்தை 16-ஆம் ஆசீர்வாதப்பர் நமக்குக் கற்பித்ததைப் போன்று மனிதனுக்கு நிபந்தனையற்ற அன்பு தேவை. "சாவோ, வாழ்வோ வானதூதரோ, ஆட்சியாளரோ, நிகழ்வனவோ, வருவனவோ, வலிமை மிக்கவையோ, உன்னதத்தில் உள்ளவையோ, ஆழத்தில் உள்ளவையோ, வேறெந்த படைப்போ, நம் ஆண்டவர் கிறிஸ்து இயேசுவின் வழியாய் அருளப்பட்ட கடவுளின் அன்பிலிருந்து நம்மைப் பிரிக்கவே முடியாது என்பது என் உறுதியான நம்பிக்கை" (உரோ 8: 38-39), என்று சொல்ல உறுதித்தன்மை தேவைப்படுகிறது. என் நம்பிக்கையாம் கிறிஸ்து உயிர்த்துவிட்டார்; அவர் மாட்சியில் வந்து ஆட்சி செய்து கொண்டிருக்கின்றார்; சாவு வெற்றியாய் உருமாற்றம் பெற்றுள்ளது. ஆகவே, கிறிஸ்தவர்களின் நம்பிக்கையும் சிறந்த எதிர்நோக்கும் கிறிஸ்துவின் உயிர்ப்பில் அடங்கியுள்ளன.

இதுவே, மனமாற்றத்தின் மூன்றாவது அழைப்பு: கடவுளையும் நிலைவாழ்வாகிய அவரது சிறந்த வாக்குறுதியையும் நம்பும் எதிர்நோக்கிற்கான அழைப்பாகும். ஆண்டவர் எனது பாவங்களை மன்னிக்கிறார் என்று உறுதி கொள்கிறேனா? மீட்புக்காக ஆவலாய் இருந்து அதை அடைவதற்கு கடவுளின் உதவியைக் கேட்கிறேனா? வரலாற்றின் நிகழ்வுகளை விளக்குவதற்கும் நீதிக்கும்

சகோதரத்துவத்துக்குமான அர்ப்பணத்தை என்னில் தூண்டுவதற்கும் நமது பொது இல்லத்தைப் பராமரிப்பதற்கும் மற்றும் அதன் வழியாக எவர் ஒருவரும் தனித்துவிடப்பட்டதாய் உணராமல் இருக்கவும் என்னைச் செயல்படத் தூண்டும் எதிர்நோக்கை உறுதிபட அனுபவிக்கின்றேனா?

சகோதரிகளே, சகோதரர்களே, கிறிஸ்து இயேசுவில் நமக்குக் கிடைக்கப்பெற்ற கடவுளின் அன்பிற்காக நன்றி. 'எதிர்நோக்கு ஏமாற்றம் தராது' (காண். உரோ 5:5) என்பதில்தான், நாம் உறுதி அடைந்துள்ளோம். "நம்பிக்கை என்பது ஆன்மாவின் உறுதியான நிலையான நங்கூரம்". அதுவே எல்லாரும் மீட்படைய திரு அவையை இறைவேண்டல் செய்யத் தூண்டுகிறது (1 திமோ 2:4). விண்ணக ஆட்சியில் தனது மணவாளன் கிறிஸ்துவோடு இணைந்திருக்கும் ஆவலைக் கொடுக்கிறது. இதுவே, அவிலா திரேசாவின் இறைவேண்டலாகவும் இருந்தது: "நம்பிக்கை கொள், ஓ மனமே, நம்பிக்கை கொள். நாளும் நேரமும் உங்களுக்குத் தெரியாது. விழிப்பாய் இருங்கள், ஏனெனில், நிலையானவற்றைக் குறித்து உங்களது பொறுமையின்மை சந்தேகத்தை வலுப்பெறச் செய்தாலும் குறுகிய ஒன்றை நீண்டதாக மாற்றினாலும், அனைத்தும் விரைவாகக் கடந்து செல்கிறது" (கடவுளுக்கு ஆன்மாவின் ஆச்சரிய குறியீடுகள் 15: 3).

நம்பிக்கை எதிர்நோக்கின் அன்னையாம் கன்னி மரியா நம் அனைவருக்காகவும் பரிந்து பேசி, தவக்காலத் திருப்பயணத்தில் நம்மோடு இணைந்து பயணம் மேற்கொள்வாராக.

(உரோமை, தூய யோவான் ஆலயம் இலாத்திரான் பேராலயம், 6 பிப்ரவரி 2025, மறைச்சாட்சிகளான பால் மீக்கி மற்றும் அவருடைய தோழர்கள் நினைவு தினத்தன்று கொடுக்கப்பட்டது.)

அகில இந்திய கத்தோலிக்க ஆயர்கள் பேரவை

36-வது பொதுக்குழு கூட்டம், ஜனவரி 28 – பெப்ரவரி 4, 2025, புவனேஸ்வர் இந்தியாவில் உள்ள கடவுளின் பிள்ளைகளுக்குக் கடிதம்

எதிர் நோக்கின் திருப்பயணிகள் : கூட்டொருங்கியக்கப் பாதைகளை ஆய்ந்துணர்தல்

காண்பவற்றின்அடிப்படையில் அன்று மாறாக நம்பிக்கையின் அடிப்படையிலே நாம் வாழ்கிறோம். (2 கொரி 5:7)

கிறிஸ்துவில் அன்பிற்கினிய சகோதர சகோதரிகளே,

ஒடிஸா மாநிலத்தின் புவனேஸ்வரில் உள்ள XIM பல்கலைக் கழகத்தில் கடந்த ஜனவரி 28 முதல் பெப்ரவரி 4 வரை அகில இந்திய கத்தோலிக்க ஆயர்கள் பேரவையின் 36-வது பொதுக் குழுவிற்காகக் கூடிய 132 மறை மாவட்டங்களைச் சேர்ந்த 145 பேராயர்கள் மற்றும் ஆயர்கள் நாங்கள் அமைதியின், அன்பின், மகிழ்வின் வாழ்த்துக்களை உங்கள் ஒவ்வொருவருக்கும் தெரிவித்துக்கொள்கிறோம்.

ஒன்றிப்பு, பங்கேற்பு, மறைத்தூது பணியை வலியுறுத்தும் கூட்டொருங்கிணக்க ஆயர்கள் மாமன்றம், **"திரு அவை என்பது கடவுளின்**

பிள்ளைகள்" என்ற நமது புரிதலை ஆழப்படுத்தி உள்ளது. அதன் நீட்சியாக, மாமன்றத்தின் இறுதி ஆவணத்தை மனதில் நிறுத்தி, கூட்டொருங்கியக்கத் திருஅவை நோக்கி தொடர்ந்து எப்படி பயணிக்கலாம் என்று, தூய ஆவியாரின் துணையுடன் அதைக் குறித்து விவாதிக்க ஒன்றுகூடி வந்தோம். எங்களின் பொதுக்குழுவின் மையக்கருத்து: **"மறைத்தூதுப் பணிக்கான கூட்டொருங்கியக்கப் பாதைகளை ஆய்ந்துணர்தல்"**.

இந்திய திருஅவை கூட்டொருங்கியக்கத் திருஅவை நோக்கி மூன்று விதங்களில் பயணங்களை முன்னெடுத்தது. முதலாவதாக, அகில உலக அளவில், கூட்டொருங்கியக்கத் திருஅவைக்கான திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் அழைப்பிற்குப் பதிலளிக்கும் வகையில், இப்பேரவை 2021-ஆம் ஆண்டு அக்டோபர் முதல் 2022-ம் ஆண்டு ஜூலை வரை பரந்து விரிந்த ஒரு கலந்தாய்வை மேற்கொண்டு, 130 மறைமாவட்டங்களில் இருந்து வந்த பதிவுகளை ஒருங்கிணைத்து, அதை அகில இந்திய ஆயர்களின் பேரவைகளின் **"தேசிய தொகுப்பு"** (Nagional Synthesis) (ஆகஸ்ட் 2022) என்று வெளியிட்டு உயரம் தொட்டது. இரண்டாவதாக, ஆசிய அளவில், ஆகிய ஆயர்களின் பேரவைகளின் கூட்டமைப்பின் (FABC) பொன்விழா நினைவாக, ஆசிய நாடுகளின் ஆயர் பிரதிநிதிகள் இறைவேண்டலில் ஆய்ந்துணர்தலை முன்னெடுத்து, ஆசிய ஆயர்களின் பேரவைகளின் கூட்டமைப்பின் **"பாங்காக் ஐம்பதாவது ஆவணம்"** (Bankok 50 Document) (மார்ச் 2023) அன்று வெளியிட்டு உயரம் கண்டனர். மத்தேயு நற்செய்தியில் நாம் காண்கின்ற மூன்று ஞானிகள் **"வேறு வழியில் பயணப்பட்டார்கள்" (மத். 2: 12)** என்ற இறை வார்த்தை அடிப்படையில் ஆசிய மக்களாக ஒன்றிணைந்து பயணித்தல் என்ற கருத்தை வலியுறுத்தியது, இந்த ஆவணம், இறுதியாக, அகில இந்திய ஆயர்கள் பேரவை மிகப் பரந்த நிலையில் கலந்தாய்வு முறையில் தன்னை ஆட்படுத்தி, ஏறக்குறைய 5000 மக்களின் கருத்துக்களைக் கேட்டறிந்து, அதைக் கொண்டு **"கூட்டொருங்கியக்கத் திருஅவை நோக்கிய திருப்பயணம் : மறைத்தூதுப் பணி 2033"** (செப்டம்பர் 2024) என்ற மேய்ப்புப் பணி திட்டம் ஒன்றை முன்வைத்தது.

அகில இந்திய கத்தோலிக்க ஆயர்கள் பேரவை இந்த பயணங்களின் கனிகளைப் பரிசீலித்து, பொதுக்குழு கூட்டத்திற்கான செயல்திட்ட ஆவணத்தை தயாரித்தது. இந்த செயல்திட்ட ஆவணம் அதை இறைவேண்டல்கள் கலந்த சிந்தனைகளுக்கும், செவிமடுத்தலுக்கும்,

ஆய்ந்துணர்தலுக்கும் உட்படுத்தும் வண்ணம் பத்து தலைப்புகளை வரிசைப்படுத்தியது. இப் பொதுக்குழுவில் கடைபிடிக்கப்பட்ட முறையானது: ஆன்மீக உரையாடல்: **"திருஅவைகளுக்கு ஆவியானவர் கூறுவதை" (வெளி. 2: 27)** இறை வேண்டுதலுடன் செவிமடுப்பதாகும். பங்கேற்பாளர்கள் அனைவரும் ஆவியானவருடைய ஆற்றல் மிகு அசைவாடுதல் மற்றும் வல்லமையை உணர்ந்து கொண்டனர். ஆயர்கள், வரும் காலங்களில் பங்கேற்பின் எல்லா நிலைகளிலும் அதாவது பங்கு மற்றும் மறைமாவட்ட மேய்ப்புப்பணி மற்றும் நிதிநிலை குழுக்களில் இந்த முறையியலை பயன்படுத்தி, திருஅவைக்கு அதிக அளவிலே பயனுறும் வகையில் நிர்வாகத்தின் ஆளுகை மற்றும் பணி சம்பந்தமான காரியங்களில் முடிவுகளைக் கையாளத் தங்கள் விருப்பங்களை வெளிப்படுத்தினர்.

வரும் ஆண்டுகளிலும் கூட்டொருங்கியக்கப் பாதைகளைத் தேடுவதற்கு கீழ்காணும் தலைப்புக்களில் கவனம் செலுத்த வேண்டும் என்று ஆய்ந்துணர்ந்தோம்: நம்பிக்கை உருவாக்கம் மற்றும் இறை வார்த்தை, குழந்தைகள், குடும்பம், இளையோர், பொதுநிலையினர், அன்பியங்கள், புலம்பெயர்ந்தோர் மற்றும் அகதிகள், தலித்துக்கள், மலைவாழ் மக்கள், ஆதிவாசிகள், பூர்வீக பழங்குடி மக்கள், சமுதாயத்தில் ஒதுக்கப்பட்டோர், பெண்கள் மற்றும் பாலியல் சமத்துவம், ஏழ்மை மற்றும் சமத்துவப் பொருளாதாரம், மென்பொருள் தொழில்நுட்பம் மற்றும் சமூகத் தொடர்பு சாதனங்கள், சுற்றுப்புற சூழல் மற்றும் தட்பவெட்பநிலை மேற்பார்வை, கிறிஸ்தவ ஒன்றிப்பு மற்றும் பல்சமய உரையாடல், இறுதியாக அமைதியை நிலைநாட்டுதல். அகில இந்திய பேரவை இன்னும் விரிவான முறையிலே பொதுக்குழுவின் கனிகளை எல்லோருக்கும் பயன்படும் விதத்திலே, விரைவாக பகிர்ந்துகொள்ளும்.

ஆயர் மாமன்றத்தினுடைய நோக்கம், "கனவுகளை விதைக்கவும், இறைவாக்குகளையும் இலக்குகளையும் உள்வாங்கவும், எதிர்நோக்கை வளர்க்கவும், நம்பிக்கையை ஊட்டவும், காயங்களை கட்டவும், உறவுகளை ஒன்றிணைக்கவும், நம்பிக்கையின் விடிவெள்ளியை ஏற்றவும், ஒருவர் மற்றவரிடத்தில் கற்றுக்கொள்ளவும், மனங்களை ஒளிர்விக்கக் கூடிய ஒளிமயமான வழிகளை உருவாக்கவும், இதயங்களை இதமாக்கவும், நம் கரங்களுக்கு வலிமை சேர்க்கவும்" என்று இருந்தது. (திருத்தந்தை பிரான்சிஸ், இளையோர் குறித்து ஆயர் மாமன்றத்தின் துவக்க உரை,

3 அக். 2018). ஆயர் மாமன்றம் என்பது ஒரு முடிவோ அல்லது தூரமான எதிர்காலமோ அல்ல மாறாக செயல்பாட்டிற்கு இயக்கும் ஓர் அணுகுமுறை ஆகும். ஆயர்களாகிய நாங்கள் நடந்து முடிந்த 36-வது பொதுக்குழு கூட்டத்தை இப்படிப்பட்ட ஒரு தொடர் அணுகுமுறையின் முன்னேற்ற பாதையாகவே கருதுகிறோம்.

மிகுந்த தோழமை உணர்வுகளுடனும், ஆன்மிக நெருக்கத்துடனும், பொதுநிலையினர், துறவிகள் மற்றும் குருக்களாகிய உங்களுக்கு இதுவரை மேற்கொள்ளப்பட்ட பலதரப்பு விவாத அணுகுமுறைகளில் உங்களது பங்களிப்பை ஆற்றியதற்காகவும், எங்களுடைய பொதுக்குழு கூட்டம் நல்லவிதமாக நடைபெற இறைவேண்டல்களை ஏறெடுத்ததற்காகவும் நன்றி செலுத்த ஆசைப்படுகின்றோம். எங்களுடைய இறைவேண்டல்களில் உங்களை நன்றியோடு நினைவு கூர்ந்தோம். சிறப்பான விதத்திலே கட்டாக்-புவனேஸ்வர் உயர் மறைமாவட்டத்தின் பொதுநிலையினரையும், கந்தம்மால் வேதகலாபனையில் எதிர்நோக்கிலும் வேதனையிலும் தங்களைக் கையளித்து தங்கள் நம்பிக்கைக்குச் சான்று பகிர்ந்த அனைவரையும் நினைவுகூர்ந்தோம்.

கூட்டொருங்கிணைக்கக் குடும்பமாய் கூட்டொருங்கியக்கத் திருஅவையை நோக்கி பயணத்தை மேற்கொள்வது எங்கள் இதயபூர்வமான ஆவலாய் உள்ளது. திரு அவைக்கு முழுமையாக தங்களைக் கையளிக்கும் நபர்களை வரவேற்று, அவர்களோடு ஒன்றாக நடந்து, தூய ஆவியாரின் வழிகாட்டுதலோடு மறைதூதுப் பணிக்கான கூட்டொருங்கியக்கப் பாதைகளைக் காண விளைகின்றோம். நம் திருப்பயணத்தில் நம்முடன் பயணிக்கும், திருஅவையின் அன்னையாம் மரியாள் நம்மை வழிநடத்தி, நிகழும் இந்த யூபிலி ஆண்டிலும் வரும் ஆண்டுகளிலும் எதிர் நோக்கின் திருப் பயணிகளாக மறைத்தூது பணியின் ஆர்வத்தோடு கூட்டொருங்கியக்கப் பாதையில் பயணிக்க துணைப்புரிவாராக.

கர்தினால் பிலிப் நேரி பெறாவோ

தலைவர், அகில இந்திய கத்தோலிக்க ஆயர்கள் பேரவை பேராயர், கோவா & தாமன்

பேராயர் ஜார்ஜ் அந்தோணிசாமி

உதவித் தலைவர், அகில இந்திய கத்தோலிக்க ஆயர்கள் பேரவை, சென்னை & மயிலை உயர் மறைமாவட்டம்

பேராயர் அனில் ஜோசப் தாமஸ் கூட்டோ

செயலர், அகில இந்திய கத்தோலிக்க ஆயர்கள் பேரவை பேராயர், டெல்லி உயர் மறைமாவட்டம்.

FROM THE PROCURATOR'S OFFICE

Dear Rev. Fathers,

Greetings and Prayerful wishes from Fr. J. Antony Joseph.

Audit of Accounts:

As per the direction of our Bishop and the Diocesan Finance Committee, the Auditor and I will audit the accounts of the Parishes and Institutions as per the schedule given below. Kindly keep ready the necessary bills and vouchers updated. Prior intimation, however, will be given to you about our visit.

S.No.	Date	Place
1	14.03.2025	Cathedral, Kumbakonam
2		Sacred Heart Minor Seminary, Kumbakonam
3		Villiavarambal
4		Vadagarai
5		Mathur
6	21.03.2025	Annamangalam
7		Eraiyur
8		Kalpalayam
9		Purathakudi
10		Amalashram
11	22.03.2025	Samayapuram
12		Chathiram - Valady
13		Irungalur
14		Pudur Uthamanur
15		Vandalai
16	28.03.2025	Pattanamkurichi
17		St. Peter's Arts and Science College, Melaneduvai
18		Thennur
19		Pudukuppam
20		Keelaneduvai
21	29.03.2025	Kumilankuzhy
22		Vadaveekkam
23		Koovathur
24		Agnespuram
25		Andimadam

The following are the list of Parishes, Institutions and Priests who have contributed their Slab, Surplus Mass Intentions and Contributions (December, 2024 - February, 2025)

Slab Remitted :

1.	Megalathur	5,000
2.	Punalvasal	15,000
3.	Thottiam	25,000
4.	Manathidal	5,000
5.	Kovandakurichi	15,000
6.	Kattur Ramanathapuram	25,000
7.	Vadagarai	20,000

Mass Intention:

1.	Jayankondam Parish	38, 100
2.	Thennur Parish	30, 000

Contribution from the Institutions:

1.	Don Bosco Hostel, Viragalur	1,00,000
2.	Contribution from Poondi Basilica	15,00,000
3.	Contribution from B. Ed. College, Samayapuram	15,00,000
4.	Contribution from Community Hall, Thiruppanthurithi	1,47,140
5.	Contribution from Retreat Centre, Poondi	50,31,31
6.	Annai Lourdu Girls Hr Sec. School, Thennur	2,00,000

Pension Contribution:

1.	Fr. L. Benjamin	64,000
2.	Fr. J. John Panneerselvam	21,000

Salary Contribution from Teaching Priests:

1.	Fr. A. Antony, Kumbakonam (for Nov. - Dec., 2024)	1,20,000
2.	Fr. A. Arul Sebastian, Kumbakonam (for Dec., 2024 - Jan., 2025)	95,080
3.	Fr. U. Rajendrasekar, Purathakudi (for Dec., 2024- Jan., 2025)	1,14,116
4.	Fr. L. Robert Selvan, Purathakudi[1] (for July, 2024 - January, 2025)	8,65, 284
5.	Fr. R. Jayaraj (for September and October, 2024)	1,70,696

Contribution from Priests working Abroad:

1.	Fr. M. Arulraj (for May to Dec., 2024)	1,56,400
2.	Fr. S. Jerome Paulraj (for Sep. 2021 to Aug. 2024)	3,50,000

Note: Dear and Rev. Fathers, This is our good old custom to offer three Holy Masses for the repose of the soul of departed priest of our diocese. I wish to remind you to offer three Holy Masses for the soul of Rev. Fr. A. R. Chinnappan who passed away on 09th January, 2025.

Yours in Christ,
Fr. J. Antony Joseph,
Procurator

இளைஞர் மற்றும் குடும்பநலப் பணிக்குழுக்கள்

03.02.2025 கல்லூரி மாணவர்களுக்குத் துறை சார்ந்த வேலை வாய்ப்பு மையங்கள் மற்றும் மேற்படிப்புகளுக்கான வழிகாட்டும் நெறிமுறை குறித்த விழிப்புணர்வு கொடுக்கப்பட்டது.

10.02.2025 கல்லூரி மாணவ / மாணவிகளுக்கு தமிழக அரசு வழிகாட்டகூடிய "நான் முதல்வன்" திட்டம் பற்றிய விழிப்புணர்வு வகுப்பு நடத்தப்பட்டது.

22.02.2025 பள்ளி மாணவ/மாணவிகளுக்கு மண்ணின் கலை பயிற்சி கொடுக்கப்பட்டது.

21-22-02-2025 இரண்டு நாள் "குழந்தைகள் பாராளுமன்றம்" குறித்த விழிப்புணர்வு கருத்தமர்வு நடத்தப்பட்டது.

மார்ச் மாதம் திருமணத் தயாரிப்புப் பயிற்சி நடைபெறும் இடங்கள்

வ.எண்.	தேதி	இடம்
1	மார்ச் 01 மற்றும் 02 சனி மற்றும் ஞாயிறு	குழந்தை இயேசு திருத்தலம் நம்பர்-1, டோல்கேட், திருச்சி
2.	மார்ச் 15 மற்றும் 16 சனி மற்றும் ஞாயிறு	மேய்ப்புப் பணி மையம், கும்பகோணம்

இவண்,

அருள்பணி A. ஜேம்ஸ்ராஜ்,

செயலர், இளைஞர் மற்றும் குடும்பநலப் பணிக்குழுக்கள்.

மறைக்கல்வி, நற்செய்தி அறிவிப்பு மற்றும் பெஸ்கி கலைக்குழு பணிக்குழுக்கள்

03-10.02.2025 நமது மறைமாவட்ட ஆயர் அவர்களின் திருநிலைப்பாட்டு முதலாமாண்டு நன்றி விழா கொண்டாட தயாரிப்பு நிகழ்வுகள் திட்டமிட்டு செயல்படும் பணி நடைபெற்றது.

11.02.2025 நமது மறைமாவட்ட ஆயர் அவர்களின் திருநிலைப்பாட்டு முதலாமாண்டு நன்றிவிழா சிறப்பாக மறைப்பணி மையத்தில் கொண்டாடப்பட்டது. இந்நிகழ்வினை முன்னிட்டும் சிறப்பாக அகில உலக யூபிலி 2025 நினைவாகவும் நமது மறைமாவட்டத்தின் இரண்டாம் பாதுகாவலரான புனித அருளானந்தரை மறைப்பணி மையத்தின் பாதுகாவலராக ஆயர் அவர்களால் அறிவித்தார்கள். மேலும் மறைப்பணி மையத்தின் பாதுகாவலரான புனித அருளானந்தர் சுருபமானது நமது ஆயர் அவர்களின் திருக்கரங்களினால் புனிதம் செய்யப்பட்டு, நமது மறைமாவட்ட முதன்மை தந்தை பேரருள்திரு M. பிலோமின்தாஸ் அவர்களால் மறைப்பணி மையத்தின் மேல்தளத்தில் நிறுவப்பட்டது.

12.02.2025 நமது மறைமாவட்ட வேதியர்களின் மாதாந்திர தியானம் ஓரியூர் புனித அருளானந்தர் திருத்தலத்திலும், இடைக்காட்டூர் திருஇருதய ஆண்டவர் திருத்தலத்திலும் நடைபெற திருப்பயணமாகச் சென்றுவந்தோம்.

13-28.02.2025 மறைக்கல்வி மற்றும் நன்னெறி தேர்வில் வெற்றிபெற்றவர்களை தேர்வுசெய்யும் பணியும், 01.03.2025 - ல் நடைபெறும் தலைமையாசிரியர்கள் கூட்டத்திற்குத் தயாரிப்புப் பணியும் நடைபெற்றன.

பெஸ்கி கலைக்குழு

11.02.2025 நமது ஆயர் அவர்களின் திருநிலைப்பாட்டு நன்றி விழாவும் புனித அருளானந்தர் பற்றிய வாழ்க்கை வரலாறு பரத நாட்டிய ஆடியோ கேசட் வெளியீட்டு நிகழ்வும் ஒளி, ஒலி பதிவு செய்து யூடியூப் வழியாக வெளியிடப்பட்டன.

16.02.2025 தென்னூர் பங்கில் நடைபெற்ற திருப்பலியை ஒளி, ஒலி பதிவுசெய்து மாதா டிவி தொலைக்காட்சியில் வெளியிட உதவி செய்யப்பட்டது.

17-21.02.2025 நமது மறைமாவட்ட 125 வது யூபிலி ஆண்டினை முன்னிட்டு வெளியடப்பட்ட ஆவணப்படத்தில் விடுபட்ட தரவுகளை சேர்ப்பதற்கான பணிகள் நடைபெற்றன.

தவக்கால சிறப்பு நிகழ்வுகளாக :

திருநீற்று புதன், ஆறு வெள்ளிக்கிழமைகள், குருத்து ஞாயிறு மற்றும் புனித நாள்களில் யூடியூப் வழியாக தவக்கால சிறப்பு செய்தி வழங்க நமது மறைமாவட்டத்திலுள்ள ஆயர் உள்ளிட்ட அருள்தந்தையர்கள், பங்குப்பெற இருக்கும் சிறப்புச் செய்தியினை புதிவு செய்யும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

மேலும் மாதா தொலைக்காட்சிக்கு மறைமாவட்டத்தில் நடைபெறுகின்ற செபமாலை, ஆராதனைகளை ஒளி, ஒலி பதிவு செய்யும் பணியும், புனிதவார நாள்களுக்குரிய பாட்டுப் பதிவும் சில பங்குகளில் ஒளி, ஒலி பதிவு செய்யும் பணியும் நடைபெற்று வருகின்றன.

இவண்,
அருள்பணி A. இராஜமாணிக்கம்,
இயக்குனர், மறைப்பணி மையம்.

அன்பியம், விவிலியம் மற்றும் பொதுநிலையினர் பணிக்குழுக்கள்

10.02.2025 மாத்தூர் பங்கு வீரராகவபுரத்தில் அன்பியம் தொடங்க மக்களிடம் கலந்தாலோசித்து அன்பியம் எப்படி நடத்த வேண்டும் என்ற பயிற்சிக் கொடுக்கப்பட்டது.

11.02.2025 பொதுநிலையினருக்கான கருத்தமர்வு எற்பாடாக அழைப்பிதழ் கொடுக்கப்பட்டது.

22.02.2025 இலால்குடி, புள்ளம்பாடி, பெரம்பலூர் ஆகிய மறைவட்டத்தில் உள்ள பங்குகளிலிருந்து 154 நபர்கள் கலந்துக்கொண்டார்கள். இரண்டாம் வத்திகான் சங்க ஒளியில் யூபிலி 2025 என்ற மையப்பொருளில் கருத்தமர்வு நடைபெற்றது.

இன்றைய உலகில் திருஅவை என்ற தலைப்பில் அருள்பணி மரிய மைக்கேல், மாநில செயலர் பொதுப்பணிக்குழு, திருச்சி, அவர்களும், எதிர்நோக்கின் அடித்தளம் இறைவார்த்தை என்ற தலைப்பில் அருள்பணி A. பெனடிக்ட் திரவியம் அவர்களும், திருப்பயணத்தில் திருஅவை என்ற தலைப்பில் அருள்பணி M.A. சூசைமாணிக்கம் அவர்களும், எதிர்நோக்கின் உச்சம் திருவழிபாடு என்ற தலைப்பில் முசிறி பங்குத்தந்தை அருள்பணி M. குழந்தைராஜ் அவர்களும் கருத்தமர்வை நடத்தினார்கள். மறைமாவட்ட இணைச்செயலர் சகோ. பாப்பு வில்லியம் நன்றி கூறினார்.

கலந்துக்கொண்ட அனைவருக்கும் பங்குத்தந்தையர்களுக்கும் மனமார்ந்த நன்றிகளும், வாழ்த்துக்களும்.

28.02.2025 திருச்சி அருங்கொடை இல்லத்தில் மறைமாவட்ட செயலருக்கான கூட்டம் நடைபெற்றது.

இவண்,
அருள்பணி. A. பெனடிக்ட் திரவியம்,
செயலர், அன்பியம், விவிலியம் மற்றும்
பொதுநிலையினர் பணிக்குழுக்கள்.

பெண்கள் பணிக்குழு

29,30.01.2025 புள்ளம்பாடி மறைவட்டத்திலுள்ள 15 பங்குகளுக்குச் சென்று பங்குத்தந்தையர்கள், அருள்சகோதரிகள், பெண்கள் இயக்க பொறுப்பாளர்களை சந்தித்து இயக்க கூட்டம் நடத்தப்பட்டது.

4,6,13.02.2025 பாபநாசம் புனித செபஸ்தியர் நடுநிலைப்பள்ளில் 6 – 8 ஆம் வகுப்பு மாணவிகளுக்கு பருவமடைந்த பெண் குழந்தைகளுக்கான சுகாதார விழிப்புணர்வு வகுப்பு மருத்துவர் சாய் மணிகண்டேஸ்வரி,M.B.B.S., அருள்சகோதரி ஷெர்லி ஆண்டனி, வேதியர் V. மரியபுஷ்பம் ஆகியோர் கருத்துரைகள் வழங்கினார்கள். 50 பேர் பங்கேற்று பயனடைந்தார்கள். தொடர்ந்து அதே பள்ளியில் ஊட்டசத்து குறைபாடுள்ள பெண் குழந்தைகளை தேர்வுசெய்து மருத்துவர் பரிசோதித்த பின்பு 25 மாணவிகளுக்கு அயன் டானிக், புரோட்டின் பவுடர் மற்றும் மருந்துகள் கொடுக்கப்பட்டன.

19.02.2025 பணிக்குழுவின் அலுவலகத்தில் செயலர் தலைமையில் நிர்வாகக்குழு கூட்டம் நடைப்பெற்றது. அதில் பெண்கள்தின கொண்டாட்டம் பற்றிய கலந்தாய்வு நடைப்பெற்றது.

20.02.2025 திருச்சி, பிராட்டியூர் பெண்கள் பணிக்குழுவின் மாநில செயலர் அவர்களிடம் பணியின் செயல்பாடுகள் பற்றி அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது.

22,24.02.2025 அகில உலக பெண்கள்தினம் மறைமாவட்ட அனைத்து பங்குகளிலும் சிறப்பிக்க அதற்கான சுவரொட்டிகள், துண்டுபிரசுரம், திருவழிப்பாட்டு குறிப்புகள் அனைத்தும் அனுப்பிவைக்கப்பட்டன.

23.02.2025 சிக்கல்நாயக்கன்பேட்டை பங்கில் அருள்பணி செபாஸ்டின் அவர்கள் முன்னிலையில் பெண்கள் இயக்க கூட்டம் நடத்தப்பட்டது.

25.02.2025 புள்ளம்பாடி மறைவட்டம் அனைத்து பங்குகளுக்கும் சென்று பங்குத்தந்தையர்கள், அருள்சகோதரிகள் மற்றும் இயக்க பொறுப்பாளர்களுக்கு பெண்கள்தின அழைப்பிதழ் கொடுக்கப்பட்டது.

குறிப்பு : இறையேசுவில் அன்புள்ள பங்குத்தந்தையர்களே,

08.03.2025 அன்று உலக பெண்கள் தினம் திருஅவையில் சிறப்பிக்க பெண்களை ஆற்றல்படுத்தி சம உரிமையை நிலைநாட்டுவோம் என்ற கருப்பொருளை மையப்படுத்தி சுவரொட்டிகள், துண்டுபிரசுரம், திருவழிபாட்டு குறிப்புகள் அனைத்தும் அனுப்பிவைக்கிறோம். தங்கள் பங்கில் பெண்களுக்கான சிறப்பு திருப்பலி நிறைவேற்றி பெண்கள் தினம் சிறப்பிக்குமாறு தங்களை அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

புள்ளம்பாடி மறைவட்டம், புள்ளம்பாடி புனித அன்னாள் ஆலயத்தில் 15.03.2025 அன்று மேதகு ஆயர் தலைமையில் பெண்கள் தினம் கொண்டாடப்படுவதால் அனைவரும் கலந்துக்கொண்டுச் சிறப்பிக்குமாறு தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

இவண்,
அருள்சகோதரி. ஷெர்லி ஆண்டனி, DMI
செயலர், பெண்கள் பணிக்குழு.

பட்டியலினத்தார் / பழங்குடியினர் பணிக்குழு

19.01.2025 கும்பகோணம் மறைவட்டத்தில் உள்ள தலித் கிறித்தவ மக்கள் மன்றம் மற்றும் மாலைநேர வகுப்பு மாணவர்கள் சந்திக்கப்பட்டார்கள்.

24.01.2025 ஜெயங்கொண்டம் மறைவட்டத்தில் உள்ள மாலைநேர வகுப்பு மாணவர்கள் சந்திக்கப்பட்டு தலித் கிறித்தவ மக்கள் மன்றம் சந்திக்கப்பட்டது.

28.01.2025 மைக்கேல்பட்டி மறைவட்டத்தில் உள்ள மாலைநேர வகுப்பு மாணவர்கள் மற்றும் தலித் கிறித்தவ மக்கள் மன்ற உறுப்பினர்களை பணிக்குழுவின் செயலர் அருள்பணி A. இருதயராஜ் சந்தித்தார்.

15.02.2025 ஜெயங்கொண்டம் மறைவட்டத்தில் உள்ள தலித் கிறித்தவ மக்கள் மன்ற பொறுப்பாளர்களுக்கு சமூகப் பகுப்பாய்வு கூட்டம் ஆண்டிமடம் புனித மார்ட்டினார் ஆலயத்தில் செயலர் அருள்பணி A. இருதயராஜ் தலைமையில் நடைபெற்றது. நடுமண்டல ஒருங்கிணைப்பாளர் திரு A. தமிழரசன் அவர்கள் சமூகத்தில் நடைபெறும் அநீதிகளை சுட்டிக்காட்டி கருத்துரையை தொகுத்து வழங்கினார். களப்பணியாளர் திரு ப்ராங்கிளின், திரு அடைக்கலராஜ் (வேதியர்) இக்கூட்டத்திற்கு அனைத்து ஏற்பாடுகளையும் செய்திருந்தார்கள். இதில் 40 தலித் கிறித்தவ மக்கள் மன்ற பொறுப்பாளர்கள் கலந்துக்கொண்டார்.

இவண்,

அருள்பணி. A. இருதயராஜ்,

செயலர், பட்டியலினத்தார் / பழங்குடியினர் பணிக்குழு.

கல்வி உதவித்தொகை நன்கொடை விவரம்
பிப்ரவரி - 2025

நெ.	விபரம்	தொகை
	கும்பகோணம் :	
1.	ஹோலி ஏஞ்சல் அருள்சகோதரிகள், SMMI	2,000
2.	ஆக்னஸ் அன்னாள் மாநில தலைமையகம் அருள்சகோதரிகள், SAT	12,000
3.	Dimesse அருள்சகோதரிகள், DMI, சிவபுரம்	2000
4.	இதயா மகளிர் கல்லூரி அருள்சகோதரிகள், FIHM	3000
5.	புனித வளனார் பெண்கள் மேல்நிலைபள்ளி அருள்சகோதரிகள், FIHM	2000
6.	இம்மாக்குலேட் அருள்சகோதரிகள், FIHM	1000
7.	புனித அன்னாள் ஆங்கிலப்பள்ளி அருள்சகோதரிகள், SSA	5000
8.	புனித அன்னாள் மருத்துவமனை அருள்சகோதரிகள், SMMI	3000
9.	திருஇருதய ஆண்டவர் மருத்துவமனை	10,000
10.	திருஇருதய இளங்குருமடம்	1000
11.	பேராலயப் பங்குப்பேரவை	5000
12.	அருள்பணி K. ஸ்டீபன், கோக்குடி	3000
13.	பிலிப் அற்புதராஜ் & குடும்பம்	500
	அரியலூர் பங்கு :	
14.	பங்குத்தந்தை M. டோம்னிக் சாவியோ	12,000
15.	உறுதிபூசுதல் பெற்றவர்கள்	4700
16.	திருச்சி புனித அன்னாள் சகோதரிகள், SAT	25,000
17.	R.C. தூய மரியன்னை தொடக்கப்பள்ளி	1000
18.	அருள்சகோதரிகள், FIHM	1500
	கபிரியேல்புரம் பங்கு :	
19.	பங்குத்தந்தை W. அடைக்கலராஜ்	10,000
20.	பங்குத்தந்தை	5000
21.	பங்குத்தந்தை I. மரியதாஸ், **கல்பாளையம்**	10,000
22.	கேண்டிக்கல் மியூசிக் பள்ளி, **ஜெயங்கொண்டம்**	3000
	மொத்தம்	1,21,700



Sacrament of Confirmation: Ariyalur



Renovated Church Blessing: Gabrielpuram

KUMBAKONAM DIOCESE NEWS LETTER

Bishop's Episcopal Ordination First Anniversary



Bishop's House, Post Box No. 3, Kumbakonam - 612 001.
E-mail: kumbakonamdiocese@gmail.com
Webpage : www.dioceseofkumbakonam.org.

Udaya Offset Printers - Kmu. Cell : 94436 51112